ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
இலங்கை சாரணர் சங்கம்
Sri Lanka Scout Association
Incorporated by Parliamentary Act No. 13 of 1957
Member of the World Organization of Scout Movement

2026.07.24 சுற்றுநிருப : 64/2026

சகல மாவட்ட ஆணையாளர்களுக்கும்,

**தேசிய சாரணர் சேவை மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டம் - 2026**

2026ம் வருடத்திற்கான தேசிய சாரணர் சேவை மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டமானது ஆகஸ்ட் மாதம் 08ம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 07ம் திகதி வரை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு மாவட்ட ஆணையாளர்களாகிய தங்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு, சேவைகள் செயற்திட்டத்தை மாவட்ட மட்டத்தில் சிறப்புடன் செயற்படுத்துவதற்கான ஆரம்ப செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர்களாகிய தங்களுக்கு ஆலோசனை வழங்குகின்றோம்.

**1. கால எல்லை :**

தேசிய சாரணர் சேவை மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டமானது ஆகஸ்ட் மாதம் 08ம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 07ம் திகதி வரை நடைபெறும்.( கல்வி அமைச்சின் அனுமதி எதிர் வரும் காலங்களில் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.)

**2. சேவைகள் செயற்திட்டத்தின் நோக்கம் :**

சாரணர்கள் மத்தியில் கடின உழைப்புக்கும் நேர்மையான சேவை ஆகிய விழுமியங்களை வளர்ப்பதும், சாரணர் குழுக்களை பராமரிக்கவும் அதன் செயற்பாடுகளையும் செயற்திட்டங்களையும் செயற்படுத்தவும் தேவையான நிதியை திரட்டுவதுமே இந்த சேவைத் திட்டத்தின் நோக்கமாகும்.

**3. செயற்படுத்தும் வழிமுறை**

- சாரணர்களின் குடும்ப உறுப்பினர்கள்,நண்பர்கள், உறவினர்கள், அயலவர்களின் ஒத்துழைப்போடு இந்த சேவைத்திட்டத்தில் ஈடுபடுத்தமாறு சகல சாரணர்களுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது.
- சேவைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னதாக, சாரணர்களுக்கு தங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள நண்பர்களையும்,அயலில் உள்ள நிறுவனங்களிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகளை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
- சேவை மாதத்தின் போது குறைந்த பட்சம் இரண்டு சாரணர்களோ அல்லது 04 சாரணர்கள் கொண்ட குழுவாகவோ சேவையில் ஈடுபடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுவதோடு,தனித் தனியாக சேவையில் ஈடுபடுத்தப்படுவது ஊக்குவிக்கப்படவில்லை.
- உழைப்பின் மதிப்பு உணரப்படும் வகையில், நிதி மூலம் பங்களிப்பை பெற்றுக் கொள்ள சாரணர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும் சேவை அட்டையில் (பணித்தாளில்) பங்களிப்பை பதிவு செய்தற்கு முன்னதாக, தாம் மேற்கொண்ட பணி திருப்திகரமானதா உள்ளது என்பதை உறுதிபடுத்திக் கொள்ளல் வேண்டும்.
- சாரணர்கள் சேவை செயற்திட்டத்தில் பாடசாலை நேரத்திற்கு வெளியே மேற்கொள்ளல் வேண்டும்.

**4. பங்கேற்பு**

- பெற்றோர் மற்றும் சாரணர் தலைவரின் மேற்பார்வையின் கீழ் 05 வயது முதல் 18 வயது வரையிலான சாரணர்கள் மட்டுமே சாரணர் சேவை திட்டத்தில் ஈடுபட முடியும்.
- சாரணர் மற்றும் குருளை சாரணர் பிரிவுகள் சேவைத் திட்டத்தில் ஈடுபடுவதோடு, அவர்களுக்க மெலதிகமாக சிங்கிதி சாரணர் மற்றும் திரிசாரணர் தங்களின் விருப்பத்திற்கு அமைய சேவைத் திட்டத்தில் ஈடுபட ஊக்கவிக்கப்படுவதோடு,அது அவர்களின் செயற்பாடுகளுக்கு தேவையான நிதியை திரட்ட உதவும்.

65/9 ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත කොළඹ 02. ශ්‍රී ලංකා
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02.
Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka
Tel : + 94 112 433131 /+94 112 433512
FAX : + 94 112 433131
E -mail : slsaheadq@gmail.com
web : www.scout.lk

**5. வருமானப் பகிர்வு:**

தேசிய சாரணர் சேவை வாரம் மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டத்தின் வருமானம் பின்வருமாறு பகிரப்படும்.

| குழுவுக்கு | விதாசாரம் | நோக்கம் |
|---|---|---|
| சாரணர் குழுவுக்கு | **60%** | குறிப்பிட்ட சாரணர் குழுவின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும், சாரணர் செற்பாடுகளுக்காக இந்நிதியை பயன்படுத்துதல் |
| மாவட்டத்திற்கு | **22.5%** | மாவட்டத்தின் சாரணர் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்நியை பயன்படுத்ததல். |
| தேசிய தலைமையகத்திற்கு | **12.5%** | இலங்கையின் சகல மாவட்ட செயற்பாடுகளுக்காக இந்நிதியைப் பயன்படுத்துதல். |
| ஜம்போரி நிதியம் | **5%** | 11வது தேசிய சாரணர் ஜம்போறிக்கான நிதி |

<u>ජැම්බරි අරමුදල 5% 11 වන ජාතික ජැම්බරි අරමුදල සඳහා මෙම මුදල යොදා ගැනේ.</u>

**6. மதிப்பீடு :**
தேசிய சாரணர் சேவைகள் மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டத்தில் சாரணர்களை ஊக்குவிக்கும் முகமாக, விசேட பரிசுகள் மற்றும் மதிப்பீடு முறை தேசிய, மாவட்ட மற்றும் குழு மட்டத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

2025 சேவை மாதத்தில் பதிவு செய்யப்பட்ட மிக உயர் கேடயம் மற்றம் செயற்தின் 2026 சேவை மாதத்தின் தொடக்கதில் மதிப்பீடு செய்யப்படும்.

**7. சேவை தாள்கள் :**
2026 ஜுலை மாதம் 25ம் திகதியாகும் போது மாவட்டங்களுக்கு சேவை தாள்கள் பகிர்ந்தளிக்கப்படும். நேர காலத்தோடு சாரணர்களுக்கு பகிர்ந்தளிப்பது மாவட்டத்தின் செயற்பாடாகும்.

மாவட்டங்களுக்கு தேவையான சேவை தாள்களை மட்டும் முதலில் பெற்றுக்கொள்ளவதோடு, தேவையேற்படும் போது மேலதி தாள்களை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும்,சாரணர் குழுவின் ஊடாக தொலைக்கப்படும் சேவை தாள்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**8. மாவட்ட ஆணையாளரால் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை**
பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர்களாகிய தங்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

8.1 சேவை செயற்திட்டத்தை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட ஏற்பாட்டாளர் ஒருவர் மற்றும் குழுவை அமைத்தல்.( நிதிக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளரை ஏற்பாட்டாளராக நியமித்துல் சிறப்பானது)

8.2 மாவட்ட ஏற்பாட்டாளரின் விபரம் (பெயர் /வட்சப் இலக்கம் /மின்னஞ்சல் முகவரி) என்பவற்றை 2026 ஜுலை 25 ம் திகதியாகும் போது தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்பவும்.( தயவு செய்து slscout5@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கும், எனும் 0764792425 வட்சப் இலக்கத்திற்கும் அனுப்பவும்.

8.3 சேவை தாள்களை பெற்றுக் கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களும், சான்றுகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**அ**) 2025ம் வருடத்திற்கான ஆணைப்பத்திரம் புதுப்பித்திருத்தல்.

**ஆ**) 2025/2026 வருடத்திற்கான தொகைமதிப்பு நிதியை செலுத்தி பதிவை நிறைவு செய்திருத்தல்.

**இ**) 2025 ம் வருடத்தில் மாவட்ட கணக்காய்வினை மேற்கொண்டிருத்தல் அல்லது வரவு செலவினை அறிக்கையை சமர்ப்பித்திருத்தல்.

**ஈ**) தேசிய சாரணர் தலைமையகத்திற்கு செலுத்தவேண்டிய நிதியை செலுத்தியிருத்தல் அல்லது பொறுப்புக்களை முழுமையாக தீர்த்திரத்தல்.

8.4 சேவை செயற்திட்டத்தை மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்துவதற்காக மாவட்டத்திற்குள் பாரிய விளம்பர வேலைத்திட்டத்தை திட்டமிடுவதன் ஊடாக சாரணர் செயற்பாடுகளை வளர்ப்பதற்கும், அமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

8.5 தேசிய சாரணர் சேவை தொடர்பினை அதிகார பூர்வமாக தொடங்குவதற்கு மாவட்ட விழா ஒன்றினை ஏற்பாடு செய்யவும்.

## 9. மேலதிக தகவல்களுக்கு

மேலதிக தகவல்களுக்காக 2026 சாரணர் சேவை மற்றும் மக்கள் தொடர்பு செயற்திட்டத்தின் ஏற்பாட்டாளராக செயற்படும் சந்துன் ஜீவந்த பதிரன (விசேட ஆணையாளர்) தொலைப்பேசி இலக்கம் 075 4403 142 சம்பத் காரியவசம் உதவி பிரதம ஆணையாளர் (நிதி மற்றும் முகாமைத்தவம்) தொலைப்பேசி இலக்கம் 0713 840 948 ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் பின்னர் வழங்கப்படும்.

இங்ஙனம்,

சாரணர் பணியில்

சம்பத் காரியவசம்
உதவி பிரதம ஆணையாளர்
(நிதி மற்றும் முகாமைத்துவம்)

சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார
பிரதம ஆணையாளர்

**பிரதி**

இலங்கை சாரணர் சங்க தவிசாளர், தலைவர: செயலாளர், பொருளாளர்
தலைமையத்தின் ஆணையாளர்கள்
அலுவலக கோவை